# இரண்டு ஜனாதிபதி செயலணிகளின் நியமனம்

கலந்துரையாடல் அறிக்கை

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

ஜூன் 2020

CENTRE FOR POLICY ALTERNATIVES

ஆரம்பநிலையாக ஆட்சியினதும், மோதல் தீர்மானத்தினதும் பிரச்சனைகள் மீது நோக்கினைக் கொண்டுள்ள சுதந்திரமானதும், கட்சி சார்பற்றதுமான தாபனமொன்றாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) விளங்குகின்றது. பொதுசன கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பு முக்கியமானது என்ற உறுதியான நம்பிக்கையில் 1996இல் அமைக்கப்பட்டதுடன், விமர்சிக்கப்படுவதும், மாற்று வழிகள் அடையாளங் காணப்படுவதும் அத்துடன் பரப்பப்படுவதுமான பொதுசனக் கொள்கை ஊடாக ஆராய்ச்சியினதும், ஆதரித்துவாதாடுதலினதும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு CPA அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளது.

6/5, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை

தொலைபேசி: +9411 2081384, +94112081385, +94112081386

ஃபக்ஸ்: +9411 2081388

மின்னஞ்சல்: info@cpalanka.org

பேஸ்புக்: www.facebook.com/cpasl

டுவிட்டர்: @cpasl

# உள்ளடக்கம்


1. அறிமுகம்……………………………………………………………………………….
2. இத்தகையத் தன்மையினையுடைய செயலணிகளை ஸ்தாபிப்பதற்கு அரசியலமைப்பின் உறுப்புரை 33 இன் பிரயோகம்……………………………………………………
3. செயலணிகளின் அதிகாரங்கள்……………………………………………....................
4. 2020 ஜூன் 2ஆம் திகதி அன்று ஸ்தாபிக்கப்பட்ட இரண்டு செயலணிகள் தொடர்பான விசேட அக்கறைகள்……………………………………………................................................

   அ. பாதுகாப்பான நாடு, ஒழுக்கமுடைய, நீதியான மற்றும் சட்டபூர்வமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி செயலணி………………....................................................

   I. செயலணியின் நோக்கம்…………………………………………………………

   II. செயலணியின் ஆக்கக்கூறு………………………………………………………...

   III. செயலணியின் அதிகாரங்கள்……………………………………………………

   ஆ. கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள் பாரம்பரியச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்கான ஜனாதிபதி செயலணி…………………………………………………….

   I. பின்னணி………………………………………………………………………….

   II. செயலணியின் ஆக்கக்கூறு……………………………………………………….

   III. செயலணியின் அதிகாரங்கள்……………………………………………………

5. முடிவு………………………………………………………………………………..

## 1. அறிமுகம்

2020இல் இலங்கையில் அதிகளவான ஜனாதிபதி செயலணிகள் நியமிக்கப்பட்டதனை நாம் கண்டோம். கொவிட்-19 இனை எதிர்கொள்வதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் மூன்று செயலணிகள் ஸ்தாபிக்கப்பட்டன. மற்றுமொரு செயலணி வறுமை ஒழிப்பு தொடர்பிலும் இன்னுமொரு செயலணி கல்வி விவகாரங்கள் தொடர்பிலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.[1] மிக அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட இரண்டு செயலணிகளானவை **பாதுகாப்பான நாடு, ஒழுக்கமுடைய, நீதியான மற்றும் சட்டபூர்வமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி செயலணி** (விசேட வர்த்தமானி இல: 2178/18 இனூடாக ஸ்தாபிக்கப்பட்டது) மற்றும் **கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள் பாரம்பரியச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்கான ஜனாதிபதி செயலணி** (விசேட வர்த்தமானி இல: 2178/17 இனூடாக ஸ்தாபிக்கப்பட்டது) என்பன ஆகும். இவ்விரண்டு செயலணிகளும் 2 ஜூன் 2020 அன்று ஸ்தாபிக்கப்பட்டன.

அரசியலமைப்பின் கட்டளையுரிமை மிக்க ஏற்பாடுகளுக்கு முரணான வகையில் மூன்று மாதங்களுக்கும் மேலாக பாராளுமன்றம் செயற்படாதிருந்த ஒரு காலப்பகுதியிலேயே இவ்விரண்டு செயலணிகளும் நியமிக்கப்பட்டன.[2] குறிப்பாக, மூன்று மாதங்களுக்கும் மேலான பாராளுமன்றக் கலைப்பு மற்றும் சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தல்களை நடாத்துதல் தொடர்பாக முன்வைக்கப்பட்ட அனைத்து மனுதாரர்களினதும் மனுக்களை விசாரிப்பதற்கான அனுமதியினை உச்சநீதிமன்றம் நிராகரித்ததனைத் தொடர்ந்தே இவ்விரண்டு செயலணிகளையும் நியமிப்பதற்கான

[1] **Task Force to be established for poverty eradication and livelihood development**, Gazette Extraordinary No. No. 2159/64, 25th January 2020, http://documents.gov.lk/files/egz/2020/1/2159-64_E.pdf; **Presidential Task Force to direct, coordinate and monitor the delivery of continuous services for the sustenance of overall community life,** Gazette Extraordinary No. No. 2168/8, 26th March 2020 http://documents.gov.lk/files/egz/2020/3/2168-08_E.pdf; **Task Force for Economic Revival and Poverty Alleviation**, Gazette Extraordinary No. 2172/9, 22nd April 2020, http://documents.gov.lk/files/egz/2020/4/2172-09_E.pdf; **Presidential Task Force to study and provide instructions on measures to be taken by all Armed Forces to prevent Coronavirus infection among members of the Tri-Forces, Gazette Extraordinary No. 2173/4, 27th April 2020**, http://documents.gov.lk/files/egz/2020/4/2173-04_E.pdf **Task Force on Sri Lanka's Education Affairs**, Gazette Extraordinary No. 2173/7, 28th April 2020, http://documents.gov.lk/files/egz/2020/4/2173-07_E.pdf

[2] அரசியலமைப்பின் உறுப்புரை 70(5)(அ) பின்வருமாறு கூறுகின்றது- பாராளுமன்றத்தைக் கலைக்கின்ற ஒரு பிரகடனம், பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான ஒரு தேதியை அல்லது தேதிகளை நிர்ணயித்தல் வேண்டும் என்பதோடு, அத்தகைய பிரகடனத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு பிற்படாத ஒரு தேதியில் கூடுமாறு புதிய பாராளுமன்றத்தை அழைத்தலும் வேண்டும். சம்பந்தன் எதிர் சட்டமா அதிபர் (கலைப்பு தீர்மானம்) (SCFR 351/2018 ) என்ற வழக்கில் உச்ச நீதிமன்றமானது, "உறுப்புரைகள் 70(2), (3), (5), (6) மற்றும் (7) என்பன பாராளுமன்றத்தை கூட்டுவது தொடர்பில் ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்கள் மீதான தேவைப்பாடுகளையும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டிய கட்டாய கடப்பாட்டினைக் கொண்டுள்ள தருணங்களையும் குறிப்பிடுகின்றன" என கூறியது (பக்கம் 71). Judgement at http://www.supremecourt.lk/images/documents/sc_fr_351_2018.pdf

வர்த்தமானி அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டன.[3] பாராளுமன்றத்தின் இருப்பு இல்லாதவொரு சந்தர்ப்பத்தில், நிறைவேற்றுத்துறை நடவடிக்கையினைக் கண்காணிப்பதற்கான ஒரு சட்டவாக்க மேற்பார்வை காணப்படுவதில்லை. இது இச்செயலணிகளின் பொறுப்புகூறும் தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை தொடர்பாக கேள்விகளை எழுப்புகின்றது. மேலும், இச்செயலணிகளின் ஆக்கக்கூறினைப் பார்க்கின்றபோது, 2020இல் நியமிக்கப்பட்ட ஏனைய செயலணிகளைப் போலவே இவற்றிலும் முன்னாள் மற்றும் தற்போதைய இராணுவ உறுப்பினர்கள், சட்டம் மற்றும் ஒழுங்கிற்கான அதிகாரிகள் மற்றும் ஏனையோர் அங்கம் வகிக்கின்றனர். இது இலங்கை அரசாங்கம் மற்றும் ஆட்சியில் அதிகரித்துவருகின்ற இராணுவ பங்கேற்பு தொடர்பான கரிசனையினைத் தோற்றுவிக்கின்றது. மேற்பார்வையின்மை, வினைத்திறனான சமநிலைத் தலையீடுகளின்மை, இராணுவத்தினர் மீது தங்கியிருக்கின்ற நிலைப்பாடு வளர்ந்துவருகின்றமை, ஜனாதிபதி ராஜபக்ஷ இலங்கையை ஆள்வதற்கு செயலணிகளில் தங்கியிருத்தல் மற்றும் அதன் தாக்கங்கள் தொடர்பாக மேலதிகமாக ஆராய வேண்டியுள்ளது. ஒழுக்கம், நிலையான தன்மை மற்றும் பாதுகாப்பு என்பனவற்றை முன்னுரிமைப்படுத்தல் என்ற ஜனாதிபதி ராஜபக்ஷவின் பிரச்சார வாக்குறுதியினை நிறைவேற்றுமுகமாகவே இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் குறித்துக் கொள்கின்றது. எவ்வாறெனினும், இந்நடவடிக்கைகள் சுதந்திரமான மற்றும் வெளிப்படையான சமுதாயத்தில் மற்றும் தாராள ஜனநாயகத்தில் எதிர்மறையான எதிர்விளைவுகளை ஏற்படுத்தக்கூடியனவாகும்.[4]

இவ்விரண்டு செயலணிகள் மற்றும் கொவிட்-19இனை எதிர்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட செயலணிகளின் அவசியத்தன்மை மற்றும் நெறிமுறைத்தன்மை[5] தொடர்பாக கேள்வியெழுப்பி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது கரிசனைகளை ஏற்கனவே வெளிப்படுத்தியிருந்தது.[6] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இச்சிறிய கலந்துரையாடல் அறிக்கையில் 2 ஜூன் அன்று நியமிக்கப்பட்ட இரண்டு செயலணிகளின் நெறிமுறைத்தன்மை, அவை ஸ்தாபிக்கப்பட்ட விதம் மற்றும் அவற்றின் தாக்கங்கள் தொடர்பாக ஆராய்கின்றது. அவற்றின் ஆக்கக்கூறு, அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அவை இலங்கையின் சட்டவாட்சி, அரசியலமைப்பு ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கம் என்பனவற்றில் செலுத்தக்கூடிய தாக்கம் பற்றிய கரிசனைகளும் இங்கு பேசப்பட்டுள்ளன. ஒவ்வொரு செயலணிக்கும் குறித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய ஏனைய விடயங்களை மிகவும் ஆழமாக ஆராய்ந்து, இவ்விரண்டு

---

[3] 'Supreme Court dismisses FR Petitions', Daily News, 2nd June 2020, https://www.dailynews.lk/2020/06/02/law-order/219880/supreme-court-dismisses-fr-petitions

[4] 'Sri Lanka's Recent Political Challenges & Prospects for the Future', Centre for Policy Alternatives, March 2020, https://www.cpalanka.org/wp-content/uploads/2020/03/Commentary-Sri-Lanka%E2%80%99s-Recent-Political-Challenges-Prospects-for-the-Future.pdf

[5] 'Structures to Deal with COVID-19 in Sri Lanka: A Brief Comment on the Presidential Task Force', Centre for Policy Alternatives, April 2020, https://www.cpalanka.org/wp-content/uploads/2020/04/FINAL-Presidential-Task-Force-on-COVID19-April-2020-copy.pdf.

[6] Statement on 'the Appointment of two Presidential Task Forces', Centre for Policy Alternatives, 5th June2020, https://www.cpalanka.org/the-appointment-of-two-presidential-task-forces/

செயலணிகளுடனும் தொடர்புறுகின்ற சட்ட மற்றும் விரிவான கரிசனங்கள் வெளிப்படுத்தப்படுகின்ற விதத்தில் இவ்வறிக்கை கட்டமைக்கப்பட்டுள்ளது.

## 2. இத்தகையத் தன்மையினையுடைய செயலணிகளை ஸ்தாபிப்பதற்கு அரசியலமைப்பின் உறுப்புரை 33இன் பிரயோகம்

ஜனாதிபதி இத்தகைய செயலணிகளை ஸ்தாபிப்பதற்கு அரசியலமைப்பின் உறுப்புரை 33இனை பிரயோகப்படுத்துகின்றமை தொடர்பாக ஏற்கனவே மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது கரிசனைகளை வெளிப்படுத்தியிருந்தது.[7] இந்நோக்கத்திற்காக வெளியிடப்பட்ட எந்தவொரு வர்த்தமானியிலும் இவற்றை ஸ்தாபிப்பதற்காக பிரயோகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பு உறுப்புரை 33இன் உப உறுப்புரை எது என்பது பற்றி குறிப்பிடப்படவில்லை. எவ்வாறெனினும், அவற்றிற்கு கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களும் மிகவும் விசேடித்தத் தன்மையினை உடையனவாயிருப்பதனால் உறுப்புரை 33(2)(ஏ) இந்நோக்கத்திற்காக பிரயோகிக்கப்பட்டிருக்கலாம் என நியாயமாக ஊகிக்கமுடிகின்றது.

> *(2) அரசியலமைப்பினால் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் சனாதிபதிக்கு வெளிப்படையாக அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களுக்கும், கடமைகளுக்கும் மேலதிகமாக சனாதிபதி பின்வரும் தத்துவங்களை உடையவராதல் வேண்டும்:-*
> *(ஏ) அவராற் செய்யப்படவேண்டுமென நாட்டிடைச் சட்டத்தினால், வழக்காறினால், அல்லது வழமையினால் தேவைப்படுத்தப்படுவனவும், அரசியலமைப்பின் அல்லது எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாய் இராதனவும் ஆன அத்தகைய எல்லா விடயங்களையும் செயல்களையும் செய்வதற்கு*

இச்செயலணிகளை ஸ்தாபிப்பதற்கு இவ்வுறுப்புரிமையை பிரயோகித்தமை தொடர்பிலான இரு பிரதான கரிசனைகளை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் முன்வைக்கின்றது. அவையாவன:

i. உறுப்புரை 33(2)(ஏ) இன் நோக்கமானது சர்வதேச வழக்காற்று மற்றும் நடைமுறை நியமங்களுக்கு கீழ் அரசொன்றின் தலைவர் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளுடன் தொடர்புற்றனவாகும். அவ் உறுப்புரை உள்நாட்டு சட்டத்திற்கு முரணற்ற செயல்களையே மேற்கொள்ள முடியும் எனக் கூறி மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் ஒரு மட்டுப்பாட்டினையும் விதிக்கின்றது. தற்போது

[7] 'Structures to Deal with COVID-19 in Sri Lanka: A Brief Comment on the Presidential Task Force', Centre for Policy Alternatives, April 2020, https://www.cpalanka.org/wp-content/uploads/2020/04/FINAL-Presidential-Task-Force-on-COVID19-April-2020-copy.pdf.

ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் செயலணிகளைப் போன்று செயலணிகளை அமைத்து அவற்றிற்கு பரந்த அதிகாரங்களை அளிப்பதற்கான அதிகாரத்தினை உண்மையில் அவ் உறுப்புரை ஜனாதிபதிக்கு வழங்கவில்லை. இச்செயலணிகளின் நியமனத்திற்கும் சர்வதேச சட்டம், வழக்காறு அல்லது நடைமுறையின் கீழ் செய்யப்படகூடியன என ஜனாதிபதிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அல்லது செய்ய வேண்டும் என அவரைத் தேவைப்படுத்துகின்ற செயல்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

ii. உறுப்புரை 33(2)(ஏ)இன் கீழ் ஜனாதிபதிக்கு இச்செயலணிகளை ஸ்தாபிப்பதற்கான அதிகாரமுண்டு என கருதினாலும்கூட, ஜனாதிபதியினால் செய்யப்படுகின்ற அச்செயல் நாட்டின் அரசியலமைப்புக்கு அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்திற்கு முரணானதாக அமையக்கூடாது என குறிப்பிட்ட உறுப்புரை தேவைப்படுத்துகின்றது. அதற்கமைய, ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் கீழ் வேறு ஏதேனுமொரு அதிகார சபைக்கு பாரப்படுத்தப்பட்டுள்ள ஏதேனுமொரு அதிகாரத்தை செயலணிக்கு பாரப்படுத்துவதற்காக இவ் உறுப்புரையினை பிரயோகிக்க இயலாது.

இச்செயலணிகளை ஸ்தாபிப்பதற்கான வர்த்தமானிப் பத்திரிகைகளின் தெளிவற்றத் தன்மை காரணமாக செயலணிகளின் வகிபாகம், குறிப்பிட்ட பணிகளைச் செய்வதற்கு சட்டரீதியாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள பல்வேறு அதிகார சபைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதா அல்லது அத்தகைய பணிகளைத் தாமே நிறைவேற்றும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டனவா அல்லது இவ்விரண்டினதும் கலப்பாக உள்ளனவா என்பது குறித்த தெளிவினைப் பெற முடியாதுள்ளது. அவர்களுடைய வகிபாகம் ஒருங்கிணைப்பிற்கு அல்லது கொள்கையாக்கத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளபோதிலும்கூட, அத்தகைய பணிகளை நிறைவேற்றுவதற்காக அரசியலமைப்புரீதியாக மற்றும் சட்டரீதியாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட அமைச்சுக்களுக்கு அப்பணிகளை பாரப்படுத்த முடியாமைக்கான காரணம் யாது என்பது அறியப்படாததாகவே உள்ளது.

தெளிவற்ற மற்றும் பரந்தளவான அதிகாரங்களைக் கொண்ட செயலணிகளை நியமிக்கின்ற இப்போக்கு நெறிமுறைத்தன்மை தொடர்பான கேள்வியொன்றை எழுப்புவதற்கு அப்பால், அரசியலமைப்பு மற்றும் சட்டவாக்கங்களினூடாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களை மழுங்கடிக்கக்கூடிய தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியதாகும். சட்டத்தினால் அளிக்கப்படுகின்ற நிச்சயத்தன்மை மற்றும் மேற்பார்வை என்பனவின்றி இயங்குகின்ற இத்தகைய பல்வேறு செயலணிகளை ஜனாதிபதி ஆட்சி பொறுப்பில் இணைக்கின்றார் என்ற நிகழ்வானது சர்வாதிகார ஆட்சிக்கான அறிகுறியொன்றாகவே காணப்படுகின்றது.

## 3. செயலணிகளின் அதிகாரங்கள்

ஆங்கில மொழி மூல வர்த்தமானிகளில் காணப்பட்ட சில இலக்கணப் பிழைகளின் காரணமாக செயலணிகளின் அதிகாரங்கள் தெளிவற்றுக் காணப்படுவதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தது. எவ்வாறெனினும், சிங்கள மொழி மூல வர்த்தமானியுடன்[8] ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, செயலணிகளின் அதிகாரங்களாக பின்வருவனவற்றைப் பட்டியற்படுத்த முடியும்:

ஒவ்வொரு செயலணிக்கும் பல்வேறு பணிப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் அப்பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு ஜனாதிபதி வர்த்தமானிகளினூடாக பின்வருவனவற்றைச் செய்துள்ளார்;

- செயலணிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியப்படுகின்றபோது விசாரணை செய்வதற்கான மற்றும் வழிகாட்டிகளை வெளியிடுவதற்கான அதிகாரத்தை செயலணிகளுக்கு வழங்கியுள்ளார்;
- காலத்திற்கு காலம் ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கான அதிகாரத்தை செயலணிகளுக்கு வழங்கியுள்ளார்;
- அறிவுறுத்தல்களை வழங்குவதற்கான மற்றும் அனைத்து அரசாங்க அலுவலர்கள் மற்றும் செயலணிகளுக்கு பாரப்படுத்தப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்கான உதவியினை வழங்கக்கூடிய ஏனைய நபர்கள் அத்தகைய அறிவுறுத்தல்களுடன் இணங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதற்கான அதிகாரத்தை செயலணிகளுக்கு வழங்கியுள்ளார்;
- அனைத்து அரசாங்க அலுவலர்கள் மற்றும் ஏனையோர் சாத்தியமான அனைத்து உதவிகளையும் மற்றும் வழங்கக்கூடியதாயுள்ள அனைத்து தகவல்களையும் வழங்க வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்;
- அரசாங்க அலுவலர் அல்லது அமைச்சு, அரசாங்கத் திணைக்களம், அரசக் கூட்டுத்தாபனம் அல்லது அத்தகைய நிறுவனமொன்றின் அலுவலர் அத்தகைய அலுவலருக்கு அல்லது நிறுவனத்திற்கு பாரப்படுத்தப்பட்டுள்ள கடமைகள் மற்றும்

[8] சில சட்டவாக்கங்களில் உள்ளதைப் போலல்லாது, இவ்வர்த்தமானிகளில் வர்த்தமானியின் வேறுபட்ட மொழிமூலங்களுக்கிடையில் முரண்பாடு தோன்றும்போது எம் மொழிமூலம் விஞ்சி நிற்க வேண்டும் என்பது தொடர்பாக எவ்வித ஏற்பாடும் இல்லை.

பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் ஏதேனும் தாமதம் அல்லது தவறுகை ஏற்படும்போது அவற்றை ஜனாதிபதிக்கு அறிக்கையிடுமாறு செயலணிகளைப் பணித்துள்ளார்;

ஒவ்வொரு செயலணியினதும் அதிகாரங்கள் கீழுள்ள அட்டவணையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. எனினும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள் ஆரம்ப நிலையிலேயே பல கரிசனங்களைத் தோற்றுவிக்கின்றன.

i. முதலாவதாக, ஒன்றுடனொன்று இணைந்துள்ள “விசாரிப்பதற்கான மற்றும் வழிகாட்டிகளை வழங்குவதற்கான” குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள், பிரஜைகள், தொழிற்பண்பாட்டாளர்கள், பகிரங்க சேவை, கல்வியியலாளர்கள், சட்டம் மற்றும் ஒழுங்கு, இராணுவம், எதிர்தரப்பினர் மற்றும் ஏனையோரை பாதிக்கக்கூடியளவு அறுதியான அதிகாரங்களை இச்செயலணிகள் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையினை உருவாக்கும் என்பதுடன் அது அரசியல் மற்றும் வேறு நோக்கங்களுக்காக தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களை இலக்கு வைப்பதற்கு வழிவகுக்கக்கூடும். தெளிவான மட்டுப்பாடுகள் மற்றும் மேற்பார்வை இல்லாதபோது இவ் அதிகாரங்கள் கருத்து வேறுபாடுகள் தொடர்பில் சில்லிடும் விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

ii. இரண்டாவதாக, மேற்கூறப்பட்ட அதிகாரங்கள் பகிரங்க அலுவலர்களின் சுயாதீனத்தன்மையினை அபகரிக்கக்கூடிய மற்றும் மழுங்கடிக்கக்கூடிய சாத்தியப்பாட்டுத் தன்மையினைக் கொண்டவை. சட்டத்தின் மூலமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள அரசாங்க அலுவலகங்கள், சுயாதீன மற்றும் ஏனைய நிறுவனங்களில் பணியாற்றுகின்றவர்களுக்கான அதிகாரங்கள் எழுதப்பட்ட சட்டங்களினூடாக வழங்கப்பட்டுள்ளன. தனிப்பட்டவொரு பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள செயலணி அவ் அதிகாரங்களுக்கு முரணாக செயற்படும்படி அவர்களைக் கட்டாயப்படுத்த முடியாது.

iii. மூன்றாவதாக, இச்செயலணிகளுடைய பணிகளை அமுல்படுத்துவதற்கான நிதி எவ்வாறு ஒதுக்கப்படும் என்பது குறித்தும் தெளிவற்ற நிலை காணப்படுகின்றது. அமைச்சின் செயலாளரே அதன் தலைமைக் கணக்காளராக இருக்கின்ற அதேவேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரே இவ்விரு செயலணிகளினதும் தலைவராக உள்ளமையினால் இங்கு முரண்பாடான அக்கறைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. செயற்பாட்டிலுள்ள சட்டவாக்கத்துறையினால் வழங்கப்படக்கூடிய மேற்பார்வை இல்லாமை இப்பிரச்சனையுடன் இணைந்ததாக உள்ளது.

இவ்விடயங்கள் பகிரங்க சேவை மற்றும் சமுதாயத்தில் பாரிய அழுத்தத்தினை ஏற்படுத்துமென்பதுடன் அவை பொறுப்புகூறும் தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பனவற்றையும் வெகுவாக பாதிக்கும். ஆகவே, அவை ஆழமான கண்காணிப்பினைத் தேவைப்படுத்துகின்றன.

## 4. 2020 ஜூன் 2ஆம் திகதி அன்று ஸ்தாபிக்கப்பட்ட இரண்டு செயலணிகள் தொடர்பான விசேட அக்கறைகள்

### அ. பாதுகாப்பான நாடு, ஒழுக்கமுடைய, நீதியான மற்றும் சட்டபூர்வமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி செயலணி

#### I. செயலணியின் நோக்கம்

வர்த்தமானியானது அதிகாரங்களைக் குறிப்பிடுகின்றபோதும், அச்செயலணிகளின் நோக்கம் தொடர்பாக மட்டுப்படுத்தப்பட்ட தெளிவே காணப்படுகின்றது. அவ்வர்த்தமானியில் பிரயோகிக்கப்பட்டுள்ள பல சொற்களுக்கு எவ்வித சட்ட வரையறைகளும் இல்லை என்பதுடன் அவை தெளிவற்றவனவாகவும் பரந்தளவான பொருட்கோடல் மற்றும் துஷ்பிரயோகத்தினைச் சாத்தியப்படுத்தக்கூடியனவாகவும் காணப்படுகின்றன. உதாரணமாக, ‘‘பாதுகாப்பான நாடு’’, ‘‘ஒழுக்கமுடைய’’ ‘‘நற்குணமிக்க’’, ‘‘சிவில்மயப்படுத்தப்பட்ட சமுதாயம்’’, ‘‘போதைபொருள் துஷ்பிரயோகத்தினால் ஏற்படத்தக்க ஏனைய சமுதாய சீர்கேடுகள்’’, மற்றும் ‘‘சமுதாயத்திற்கெதிரான நடவடிக்கைகள்’’ என்பன வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டுள்ள அக்கறை செலுத்தப்பட வேண்டிய சொற்கள் அல்லது சொற்றொடர்களாகும்.

அச்செயலணியின் முகப்பு ஆபத்தான போதைப்பொருட்களின் பாவனை மற்றும் கடத்தல் என்பவற்றைத் தடுப்பதே செயலணியின் நோக்கம் என்றவொரு தோற்றத்தினை ஏற்படுத்துகின்றபோதிலும், சில குறிப்பிட்ட சொற்றொடர்களின் பிரயோகம் இச்செயலணியைக் கொண்டு வேறு பல சாத்தியமான, பரந்தளவான மற்றும் இணைவான நோக்கங்களை அடைய எத்தனிப்பதற்கு சாத்தியமுண்டு என்பதனை வெளிப்படுத்துகின்றது. தெளிவற்ற சொற்பிரயோகங்கள், சட்டத்தை தம் விருப்பத்திற்கேற்ப அமுல்படுத்துகின்ற போக்குடன் இணைகின்றபோது அது இலக்கு வைத்தல், பிரிவினை மற்றும் துஷ்பிரயோகத்திற்கு வழிவகுக்கும் விதத்தினை பல சந்தர்ப்பங்களில் நாம் கண்டுள்ளோம்.[9] அதனை போன்று இவ்வர்த்தமானியில் பிரயோகிக்கப்பட்டுள்ள தெளிவற்ற

[9] உதாரணமாக, தண்டனைச் சட்டக் கோவையின் ‘பேரிழிச் செயல்’ என்ற தெளிவற்ற சொல் துஷ்பிரயோகப்படுத்தப்பட்டதனை ஒத்த மற்றுமொரு சந்தர்ப்பத்தை இத்தெளிவற்ற சொற்கள் உருவாக்கும்.

Equal Ground Sri Lanka, ‘Human Rights violations against lesbian, gay, bisexual and transgender people in Sri Lanka – A shadow report, 59th Session of the Committee on economic, social and cultural rights (Pre-sessional working group) (October 2016), page 3. Available at https://tbinternet.ohchr.org/Treaties/CESCR/Shared%20Documents/LKA/INT_CESCR_ICO_LKA_25036_E.pdf

சொற்பிரயோகங்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படக்கூடியன ஆகும். இத்தகைய தெளிவற்ற சொற்கள், குறித்த காரியத்திற்காக அமைக்கப்பட்டுள்ள இச்செயலணிகளின் தற்காலிகத் தன்மை மற்றும் அதன் ஆக்கக்கூறு என்பனவற்றுடன் இணைகின்றபோது அது பிரஜைகளின் அல்லது சமுதாயத்தின் நடத்தையினை விதிமுறைக்குட்படுத்துகின்ற மற்றும் கருத்துவேறுபாடுகள் தொடர்பில் அழுத்தத்தினை ஏற்படுத்துகின்ற ஒரு சூழ்நிலையினை உருவாக்கும்.

## II. செயலணியின் ஆக்கக்கூறு

இச்செயலணியானது தனித்து இராணுவத்தினர் (தற்போது பதவி வகிப்பவர்கள் மற்றும் ஓய்வு பெற்றவர்கள்) மற்றும் பொலிஸ் உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. சுருங்கக்கூறின், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (ஓய்வு பெற்ற இராணுவ உறுப்பினர்), முப்படைகளின் தளபதிகள், முப்படைகளின் புலனாய்வு பிரிவின் பணிப்பாளர்கள், பதில் பொலிஸ் மா அதிபர் மற்றும் இரண்டு பிரதி பொலிஸ் மா அதிபர்கள், தேசிய புலனாய்வு சேவையின் தலைவர், அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளர் மற்றும் சுங்க பணிப்பாளர் நாயகம் (இம்மூவரும் ஓய்வு பெற்ற இராணுவ உறுப்பினர்கள்) என்போரை உள்ளடக்கியதாக இச்செயலணி அமைந்துள்ளது. இச்செயலணியானது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் தலைமை தாங்கப்படுகின்றது.

இச்செயலணியில் சிவிலியன்களின் பிரதிநிதித்துவமின்மையானது, கடந்த சில மாதங்களாக ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளை உயர் பதவிகளுக்கு நியமிப்பதனூடாக[10] மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட்-19 சூழலினை எதிர்கொள்வதற்கான பெருமளவான செயற்பாடுகளின் கட்டுப்பாட்டினை இராணுவம் கொண்டிருப்பதனூடாக இடம்பெற்று வருகின்ற, அரச பொறிமுறையினை இராணுவமயமாக்குகின்ற செயற்பாட்டுடன் இணங்குவதாக அமைகின்றது. இராணுவமயமாக்கல் என்பது இலங்கையில் புதிய தொனிபொருளொன்றல்ல என்றபோதிலும், முன்னொருபோதும் நிகழ்ந்திராத அளவில் ஆட்சி செயன்முறையில் இராணுவம் மற்றும் புலனாய்வுத்துறையினரைப் பங்குக்கொள்ளச் செய்தலானது சட்டவாட்சி, நல்லிணக்கம் மற்றும் அரசியலமைப்பு ஜனநாயகத்தில் பாரதூரமானத் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும். ஜனநாயகத்தில், குறிப்பாக நேர்மையான நல்லிணக்கம் மற்றும் நிலைமாறுகால நீதி என்பவற்றை இன்னும் கண்டிராத யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையில் இராணுவமயமாக்கம் விரும்பப்படாதமைக்கான காரணங்களை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் முன்னைய பல சந்தர்ப்பங்களில் விளக்கியுள்ளது.[11] சட்டவாக்கத்துறையினரின் மேற்பார்வையின்றி சிவிலியன்களின் வாழ்க்கையில் இத்தகையக் கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கக்கூடிய இச்செயலணி, சட்டங்களை அவர்களுடைய

---

[10] அடிகுறிப்பு 4 இனைப் பார்க்க

[11] அடிகுறிப்பு 5 இனைப் பார்க்க; see also Statement on 'Practical steps to effective reconciliation', 17th February 2012, https://www.cpalanka.org/practical-steps-to-meaningful-reconciliation/

விருப்பங்களுமைக்கமைவாக அமுல்படுத்துகின்றமை உள்ளடங்கலாக பல சில்லிடும் விளைவுகளை உருவாக்கக்கூடியது என்பது ஒரு அபாய எச்சரிக்கையாக அமைகின்றது.

## III. செயலணியின் அதிகாரங்கள்

வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய இச்செயலணியானது நான்கு பணிகளை நிறைவேற்ற வேண்டுமென பணிக்கப்பட்டுள்ளது. அவையாவன:

1. *நாட்டில் சில இடங்களில் சட்டத்தை மீறுகின்ற வகையில் மற்றும் சமுதாயத்தின் சுதந்திரமான மற்றும் அமைதியான இருப்புகைக்கு குந்தகம் விளைவிக்கின்ற வகையில் இடம் பெற்று வருகின்ற சமூகக் குழுக்களின் சட்டமுரணான நடவடிக்கைகளை அடக்குவதற்கு அவசியமான மற்றும் உடனடியான நடவடிக்கைகளை எடுத்தல்.*
2. *போதைபொருள் அச்சுறுத்தலைத் தடுப்பதற்கு, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களூடாக போதை பொருட்கள் நாட்டிற்கு கொண்டு வரப்படுவதனைத் தடுப்பதற்கு மற்றும் நாட்டில் போதை பொருள் கடத்தலை முற்றாக ஒழிப்பதற்கு மற்றும் போதை பொருள் துஷ்பிரயோகத்தினால் ஏற்படுகின்ற ஏனைய சமுதாய சீர்கேடுகளைத் தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.*
3. *ஏனைய நாடுகளில் இருந்துகொண்டு இலங்கையில் சட்டமுரணான மற்றும் சமூகத்திற்கு எதிரான செயற்பாடுகளை நடாத்துவதற்கு பொறுப்பாகவுள்ள நபர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.*
4. *சிறைச்சாலைகளில் மற்றும் அதனைச் சூழ இடம்பெறுகின்ற சட்டமுரணான மற்றும் சமூகத்திற்கு எதிரான செயற்பாடுகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் அவற்றைத் தடுத்தல்.*

இந்நான்கு பணிகளை மேற்கொள்ளும்போது, இப்பணிகளை மேற்கொள்வதற்காக சட்டத்தின் மூலமாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள அதிகார சபைகளை ஒருங்கிணைத்தல் இச்செயலணியின் வகிபாகமா அல்லது இப்பணிகளை தாமாகவே செய்யும் அதிகாரம் செயலணிக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பது தெளிவற்று காணப்படுகின்றது. உதாரணமாக, பணி 4 இன் கீழ் குறிப்பிட்ட சில சட்ட முரணான நடவடிக்கைகளை விசாரணை செய்வதற்கான அதிகாரம் செயலணிக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், அவ்விசாரணையினை மேற்கொள்ள சட்டமூலமாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள அதிகார சபைகளை (உதாரணம்: பொலிஸ், குற்றவியல் நடபடிமுறைக் கோவையின் பிரிவு 108 இன்கீழ் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட விசாரணையாளர்) செயலணி வழிநடத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றதா அல்லது செயலணியே அவ்விசாரணைகளை நடத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றதா என்பது தெளிவற்று காணப்படுகின்றது.

இந்நான்கு பணி விபரணத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ள சொற்றொடர்கள், அதாவது ‘அடக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்’ (பணி 1), ‘தடுத்தல்’ (பணி 2), ‘எதிராக சட்ட

நடவடிக்கை எடுத்தல்' (பணி 3) மற்றும் 'விசாரணை செய்தல்' (பணி 4) என்பன மேலே இரண்டாவதாக சொல்லப்பட்டதே எதிர்பார்க்கப்படுகின்றது என எண்ணச் செய்கின்றது. இக் குறிப்பிட்ட பணிகளை செய்வதற்கு ஏற்கனவே நடைமுறையிலுள்ள அதிகார சபைகள் சட்டத்தின் மூலமாக அதிகாரமளிக்கப்பட்டுள்ளதனால் (கீழுள்ள அட்டவணையைப் பார்க்க) இது பிரச்சனைக்குரியதொன்றாகும். இவ்வாறு நடைமுறையிலுள்ள அதிகார சபைகளுக்கு அதிகாரமளிக்கின்ற சட்டங்கள் அவ் அதிகாரங்கள் துஷ்பிரயோகப்படுத்தப்படாமலிருப்பதனை உறுதி செய்வதற்கான ஏற்பாடுகளையும் கொண்டுள்ளன. இது செயலணிகளுக்கு இப்புதிய அதிகாரங்களைக் கொடுக்கும் முயற்சியாக இருப்பின், இது அரசியலமைப்பின் உறுப்புரை 33(2)(ஏ) இன்கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை விஞ்சி நடப்பதாக அமையும் என்பதோடு இப்பணிகளை நிறைவேற்றுவதற்கான அதிகாரங்களை அதிகார சபைகளுக்கு வழங்கியுள்ள தனிச்சட்டங்களை விஞ்சி நடப்பதாகவும் அமையும்.

குறிப்பாக, 'சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான' அதிகாரத்தை செயலணிக்கு வழங்குகின்ற 3 ஆவது பணி பிரச்சனைக்குரியதாகும். குறிப்பாக அப்பணி இலங்கைக்கு வெளியே வாழ்கின்ற நபர்கள் தொடர்பாக உள்ளமையினால் இது எவ்விடயங்களை உள்ளடக்கியுள்ளது என்பது தெளிவற்றுக் காணப்படுகின்றது. இது தாமாகவோ அல்லது தமது சார்நிலைப் பணியாளர் ஒருவர் மூலமாகவே இச்செயலணியில் பிரதிநிதித்துவப்படுத்தப்படாத சட்டமா அதிபரின் அதிகாரங்களைப் பறித்து கொள்வதாக அமைகின்றது. குற்றவியல் நடபடிமுறைக்கோவையின் பிரிவு 12 ஆனது, சட்டமா அதிபரின் வலியுறுத்தலின்பேரில் மாத்திரமே குற்றமொன்று தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு மேல் நீதிமன்றத்தினை அனுமதிக்கின்றது. ஆகவே, மேல் நீதிமன்றத்தினால் விசாரிக்கக்கூடிய குற்றங்களுக்கெதிரான சட்ட நடவடிக்கையினை சட்டமா அதிபர் மாத்திரமே மேற்கொள்ளவியலும்.[12] இதில் மிகவும் வருந்தத்தக்க விடயம் யாதெனில், இப்பணி விபரணத்தில் போதைபொருள் தொடர்பாக எவ்வித குறிப்பும் உள்ளடக்கப்படவில்லை. ஆகவே, இது சட்டமா அதிபரை விலக்கி போதைபொருட்களுடன் தொடர்புறாத குற்றங்கள் தொடர்பில்கூட சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான அனுமதியினை செயலணிக்கு வழங்குவதாக அமைந்துள்ளது.

செயலணியின் வகிபாகமானது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுப்பதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டால்கூட அது சட்டமா அதிபரின் தற்துணிபு தொடர்பானதொரு கேள்வியினை எழுப்புகின்றது. மேலும், செயலணியானது அரசாங்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், சட்டவாக்கத்தினூடாக அத்தகைய அதிகாரம் வழங்கப்படாதவொரு சந்தர்ப்பத்தில், சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கான அதிகாரம் செயலணிக்கு வழங்கப்பட முடியாது.

---

[12] உதாரணமாக நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் பிரிவு 54அ(இ) இன் படியான அபாயகரமான ஔடதங்களை நாட்டிற்கு இறக்குமதி செய்தல்.

அத்தகைய அதிகாரத்தின் சாத்தியப்பாடான அமுலாக்கம் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டதாக அமையும்.

இக்குறிப்பிட்ட பணிகள் தொடர்பான மேலதிக கரிசனங்கள் மற்றும் அவ்வதிகாரங்களை ஏற்கனவே வேறு அதிகார சபைகள் அல்லது நிறுவனங்களுக்கு பாரப்படுத்தியுள்ள சட்டங்கள் என்பன தொடர்பாக கீழுள்ள அட்டவணையில் ஆராயப்பட்டுள்ளது.

| பணி | மாற்று சட்டங்கள் மற்றும் பொறிமுறைகள் | கருத்துக்கள் |
|---|---|---|
| 1. நாட்டில் சில இடங்களில் சட்டத்தை மீறுகின்ற வகையில் மற்றும் சமுதாயத்தின் சுதந்திரமான மற்றும் அமைதியான இருப்புகைக்கு குந்தகம் விளைவிக்கின்ற வகையில் இடம் பெற்று வருகின்ற சமூகக் குழுக்களின் சட்டமுரணான நடவடிக்கைகளை அடக்குவதற்கு அவசியமான மற்றும் உடனடியான நடவடிக்கைகளை எடுத்தல். | இப்பணியில் உள்ளடக்கப்படக்கூடிய குற்றங்கள் யாவை அல்லது ''அடக்குதல்'' என்பதற்குள் உள்ளடக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் யாவை என்பது பற்றிய எவ்வித குறிப்புமில்லாதமையினால் மாற்று சட்டங்கள் மற்றும் பொறிமுறைகள் குறித்து அறிய முடியவில்லை. | இப்பணி விபரணம் மிகவும் தெளிவற்றதாக உள்ளதுடன் பல கேள்விகளை எழுப்புகின்றது.<br><br>''சட்டமுரணான நடவடிக்கை'' என்பது சட்டத்திற்கு புறம்பான எந்தவொரு நடவடிக்கையையும் அல்லது சட்டத்தின்கீழ் குற்றமாக்கப்பட்டுள்ள எந்தவொரு நடவடிக்கையையும் குறிக்கும். 'சுதந்திரமான மற்றும் அமைதியான இருப்புகைக்கு குந்தகம் விளைவிக்கின்ற' என்ற சொற்றொடரின் அர்த்தமும் தெளிவற்று உள்ளது. எவ்வாறெனினும், இது கருத்து வேறுபாடுகளை முடக்குவதற்காக பயன்படுத்தப்படலாம் என்பதனால் இது துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்படக்கூடிய அபாயம் உயர் அளவில் காணப்படுகின்றது.<br><br>'சமூகக் குழுக்கள்' மற்றும் 'நாட்டில் சில இடங்களில் இடம்பெறுகின்ற' ஆகிய சொற்றொடர்களின் பிரயோகம் இப்பணியினை சில குறிப்பிட்ட குழுக்கள் தொடர்பில் அல்லது பிரதேசங்களில் நிறைவேற்ற எத்தனித்திருப்பதாக எண்ணச் செய்கின்றது. ஆனால், இது பற்றி தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. |
| 2.போதைபொருள் அச்சுறுத்தலைத் தடுப்பதற்கு, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களூடாக போதை பொருட்கள் நாட்டிற்கு கொண்டு வரப்படுவதனைத் தடுப்பதற்கு மற்றும் நாட்டில் போதை பொருள் கடத்தலை முற்றாக ஒழிப்பதற்கு மற்றும் போதை பொருள் துஷ்பிரயோகத்தினால் ஏற்படுகின்ற ஏனைய சமுதாய சீர்கேடுகளைத் தடுப்பதற்கு அவசியமான | <u>1984 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை சட்டமானது</u> அதன் **பிரிவு 2** இனூடாக ஒரு சபையினைத் தாபித்துள்ளது. இச்சபையில் பல்வேறுபட்ட தொழிற்துறைகளைச் சேர்ந்தவர்கள் அங்கம் வகிக்கின்றனர். இச்சட்டத்தின் **பிரிவு 7** இன் கீழ் இச்சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை விஞ்சுவதாக இப்பணி அமைகின்றது.<br><br>இவ் அதிகாரங்களானவை, அபாயகரமான ஔடதங்களை துஷ்பிரயோகப்படுத்தலை தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துவது தொடர்பான தேசியக் கொள்கையொன்றினை உருவாக்குதல் **(பிரிவு 7(அ))**, அபாயகரமான ஔடதங்களை தடுப்பது மற்றும் கட்டுப்படுத்துவது தொடர்பில் பணியாற்றுகின்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் | 'போதை பொருள் துஷ்பிரயோகத்தினால் ஏற்படுகின்ற ஏனைய சமுதாய சீர்கேடுகள்' என்ற சொற்றொடருக்கு சட்டத்தில் வரைவிலக்கணம் இல்லை. அது பெரும்பாலும் போதை பொருள் நுகர்வில் தங்கியிருப்பதற்கு மட்டுப்படுத்தப்படலாம், ஆனால் ''சமூக சீர்கேடுகள்'' என்ற சொல் பிரயோகப்படுத்தப்பட்டிருப்பதனால், பல சட்டரீதியான செயற்பாடுகளையும் ''போதைபொருள் துஷ்பிரயோகம்'' என சித்தரிப்பதற்கான சாத்தியப்பாடுகளும் அதனூடாக செயலணி சட்டங்களை தம் அபிலாஷைகளுக்கு ஏற்ப |

| | | |
|---|---|---|
| நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | **(பிரிவு 7(ஈ))**, போதை பொருட்களில் தங்கி வாழ்பவர்களுக்கான சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு பொறிமுறைகளை மேற்கொள்ளல் **(பிரிவு 7(உ))**, மற்றும் அபாயகரமான ஔடதங்களின் துஷ்பிரயோகத்தினால் ஏற்படுகின்ற சமூக, கலாசார மற்றும் பொருளாதாரத் தாக்கங்கள் தொடர்பான ஆய்வுக் கற்கைகளை மேற்கொள்ளல் **(பிரிவு 7(ஊ))**<br><br>2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ஔடதங்களில் தங்கியுள்ள ஆட்கள் (சிகிச்சையளித்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல்) சட்டமானது சிகிச்சை நிலையங்களில் நபர்களை அனுமதிப்பதற்கான நடபடிமுறையினைக் குறிப்பிடுகின்றது (**பிரிவு 9** ஆனது தன்னிச்சையான அனுமதி தொடர்பிலும் **பிரிவு 10** ஆனது கட்டாய அனுமதி தொடர்பிலும் கூறுகின்றது)<br><br>சட்டத்தின் **பிரிவு 7** ஆனது அத்துறையில் நிபுணர்களாயுள்ளவர்களை உள்ளடக்கிய மதிப்பீட்டு குழாமினை ஸ்தாபித்துள்ளது. இம்மதிப்பீட்டு குழாத்தினர் சிகிச்சையை நாடி நிற்பவர்கள் மற்றும் சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருப்பவர்களை மதிப்பீடு செய்வார்கள் என்பதுடன் ஒழுங்குவிதியினால் குறிக்கப்படுகின்ற அதிகாரங்கள் மற்றும் பணிகளைக் கொண்டிருப்பார்கள் **(பிரிவு 7(3))**.<br><br>இச்சட்டத்தின்கீழான ஒழுங்குவிதிகள் அமைச்சரினால் உருவாக்கப்படவேண்டியன **(பிரிவு 21(1))** என்பதுடன் அவை பாராளுமன்ற அனுமதியினைத் தேவைப்படுத்துகின்றன **(பிரிவு 21(4)**.<br><br>சுங்கக் கட்டளைச்சட்டமானது நாட்டிற்குள் நுழைகின்ற கப்பல்கள், பயணப்பொதிகள் மற்றும் நபர்களை சோதனையிடுவதற்கான அதிகாரத்தை வழங்குகின்றது. **பிரிவு 107அ** ஆனது இலங்கைக்குள் வருகின்ற நபர்கள் மற்றும் பயணப்பொதிகளை சோதனையிடுவதற்கும் தடை செய்யப்பட்ட ஏதேனும் பொருட்களை பறிமுதல் செய்வதற்குமான அதிகாரத்தை வழங்குகின்றது. இச் சோதனையாது, அமைச்சரினால் ஆக்கப்பட்டு **(பிரிவு 107அ(1))** பாராளுமன்றத்தின் அனுமதியளிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைவாக நடைபெறுதல் வேண்டும் **(பிரிவு 107அ(4))**.<br><br>**பிரிவு 118** ஆனது சுங்க அதிகாரிகள் இலங்கையிலுள்ள எந்தவொரு துறைமுகத்திலுமுள்ள எந்தவொரு கப்பலிலும் ஏறுவதற்கான மற்றும் தடை செய்யப்பட்ட பொருட்களைத் தேடுவதற்கான அனுமதியினை வழங்குகின்றது.<br><br>**பிரிவு 118** ஆனது சுங்க அதிகாரிகள் எந்தவொரு துறைமுகத்திலுமுள்ள எந்தவொரு கப்பலிலும் அல்லது விமான நிலையத்திலும் எந்தவொரு நபரையும், அவர்களது பயணப்பொதிகள் அல்லது உடைமைகளையும் அல்லது தரையிறங்கியுள்ள நபர்கள் அல்லது அங்கு கடப்பிற்காக இறங்கியவர்களையும் சோதனைக்குட்படுத்துவதனை | சமூகத்தில் பிரயோகிக்கக்கூடிய நிலையும் ஏற்பட வாய்ப்புண்டு.<br><br>குறிப்பிட்ட ''சமூக சீர்கேடுகள்'' என்ற சொல் போதை பொருள் நுகர்வில் தங்கியிருப்பதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டாலும்கூட, அச்செயலணியில் மருத்துவத்துறைச் சார்ந்த ஒரு அலுவலரேனும் இல்லையென்பதும் போதை பொருளில் தங்கியிருத்தல் என்பது கூருணர்திறன் மிக்க விடயமென்பதனால் அதனை இராணுவ படைகளைக் கொண்டு கையாள முடியாதென்பதும் இங்கு கவனத்திலெடுக்கப்பட வேண்டிய விடயங்களாகும். |

| | | |
|---|---|---|
| | அனுமதிக்கின்றது. எவ்வாறெனினும், அத்தகைய நபர் தடை செய்யப்பட்டப் பொருட்களை வைத்துள்ளார் என நம்புவதற்கு தகுந்த காரணம் இருக்க வேண்டும் என்பதற்கமைவாகவே இச் சோதனை செய்யப்படலாம்.<br><br>பொலிஸ் போதைத் தடுப்பு பணியகமானது 1973 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. அது முதல் போதை பொருட்கள் தொடர்பான சட்டங்களின் அமுலாக்கத்தில் இப்பணியகம் ஈடுபட்டு வருவது நடைமுறையாயுள்ளது. அதேபோல, இலங்கை சுங்கத்தின் போதை பொருள் கட்டுப்பாட்டு பிரிவு போதை பொருள் கடத்தலைத் தடுப்பதற்கான சட்ட அமுலாக்கத்தினை வழிநடத்தி வருகின்றது.<br><br>கீழ்வரும் சட்டங்கள் போதை பொருள் கடத்தல் தொடர்பான சட்டவிதிகளை உள்ளடக்கியுள்ளன. செயலணி கீழ்வருவனவற்றை அமுலாக்க எத்தனிக்கின்றதா அல்லது அவற்றின் அமுலாகத்திகை ஒருங்கிணைக்கின்றதா என்பது தெளிவற்று உள்ளது.<br><br>நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் **பிரிவு 54அ** ஆனது அபாயகரமான ஔடதங்கள் பற்றிய சில குற்றங்களைக் குறிப்பிடுகின்றது. இது உற்பத்தி, கடத்தல், இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் பல்வேறுபட்ட போதைபொருட்களை வேறுபட்ட அளவுகளில் உடைமையில் வைத்திருத்தல் போன்ற குற்றங்களை உள்ளடக்குகின்றது.<br><br>2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க போதையூட்டும் ஔடதங்களினதும் உளமருட்சியூட்டும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டத்தின் **பிரிவு 2(1)** ஆனது குற்றப் பட்டியலொன்றினைக் கொண்டுள்ளது. இப்பிரிவின் காப்பு வாசகத்தின்படி இக்குற்றங்கள் இலங்கையில் இடம்பெற்றிருக்க வேண்டும். **பிரிவு 2(1)(அ)** ஆனது ஏதேனும் போதை பொருள் அல்லது உளநிலைமாற்றி பொருட்களை இறக்குமதி செய்தல் மற்றும் கடத்துதலை குற்றமாக்குகின்றது. எவ்வாறெனினும், **பிரிவு 2(2)** இன்படி அத்தகையதொரு குற்றத்தினை புரிய எத்தனித்துள்ள, ஒத்தாசையளித்துள்ள அல்லது சதி புரிந்துள்ள ஒரு நபர் இலங்கைக்கு வெளியே காணப்படினும்கூட அவருடைய இருப்பிடத்தை பொருட்படுத்தாது அவர் குற்றம் புரிந்தவராகவே கருதப்படுவார் என குறிப்பிடுகின்றது.<br>**பிரிவு 4(2)** ஆனது சர்வதேசரீதியில் ஒழுங்கமைக்கப்படுகின்ற குற்றச் செயற்பாடுகள் உள்ளடங்கலாக சில குறிப்பிட்ட பாரதூரமான சந்தர்ப்பங்கள் தொடர்பாக கூறுகின்றது**(பிரிவு 4(2)(ஆ)**). | |
| 3.ஏனைய நாடுகளில் இருந்துகொண்டு இலங்கையில் சட்டமுரணான மற்றும் சமூகத்திற்கு எதிரான | 1977 ஆம் ஆண்டு 8 ஆம் இலக்க ஆட்கடத்தல் சட்டத்தின் **பிரிவு 17(1)** ஆனது பொதுநலவாய நாடொன்றிலிருந்து அல்லது ஒப்பந்த அரசொன்றிலிருந்து ஒரு நபரை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான நடபடிமுறையினைக் | ‘சட்ட நடவடிக்கை எடுத்தல்’ என்பதனூடாக என்ன அர்த்தப்படுத்தப்படுகிறது என்பதும் அத்தகைய அதிகாரத்தை வழங்கக்கூடிய மற்றும் அதற்கான |

| | | |
|---|---|---|
| செயற்பாடுகளை நடாத்துவதற்கு பொறுப்பாகவுள்ள நபர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | கூறுகின்றது. இப்பிரிவின்படி, நாடு கடத்துவதற்கான வேண்டுகோளினை முன்வைக்க வேண்டியவர் அமைச்சர் ஆவார்.<br><br>**பிரிவு 17(2)** ஆனது நாடு கடத்தப்பட்டுள்ள ஒரு நபர் தொடர்பாக விசாரிக்கப்பட வேண்டிய குற்றங்களை மட்டுப்படுத்துகின்றது என்பதுடன் **பிரிவு 18** ஆனது வழக்கு நடபடிமுறைகள் 6 மாத காலப் பகுதிக்குள் ஆரம்பிக்கப்படாவிட்டால் அல்லது அவ்வழக்கிலிருந்து விடுதலையாயின் அல்லது விடுவிக்கப்பட்டால் நாடுகடத்தப்பட்ட நபரை எவ்வித கட்டணங்களுமின்றி மீண்டும் அனுப்பி வைப்பதற்கான அதிகாரத்தை அமைச்சருக்கு வழங்குகின்றது.<br><br>**பிரிவு 19** இச்சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கான அதிகாரத்தை அமைச்சருக்கு வழங்குகின்றது.<br><br>2008 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க போதையூட்டும் ஔடதங்களினதும் உளமருட்சியூட்டும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டமானது இச்சட்டத்தின் கீழ் புரியப்படுகின்ற குற்றங்களுடன் தொடர்புடைய நாடு கடத்தல் தொடர்பான சிறப்பான ஏற்பாடுகளை வழங்குகின்றது. பிரிவு 10 மற்றும் 24 ஆகியன இச்சட்டத்தின் கீழான குற்றங்களை நாடு கடத்தல் சட்டத்திற்குள் கொண்டு வருவதற்கமைய நாடு கடத்தல் சட்டத்தினைத் திருத்துகின்றன.<br><br>நாடு கடத்தல் ஒப்பந்தங்களெதுவும் வலுவிலில்லாதபோதும், ஐக்கிய நாடுகள் சபையின் 1988 ஆம் ஆண்டு போதையூட்டும் ஔடதங்களினதும் உளமருட்சியூட்டும் பதார்த்தங்களினதும் சட்டமுரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயமானது சமவாய நாடுகளுக்கிடையிலான நாடு கடத்தல் ஒப்பந்தமாகக் கருதப்படலாம் **என பிரிவு 13** குறிப்பிடுகின்றது. எவ்வாறெனினும், அதனை வலுவிற்கு கொண்டு வரும் வகையில் அமைச்சர் அத்தகையதொரு கட்டளையினை வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும். அதேபோன்று, **பிரிவு 25** ஆனது, போதையூட்டும் ஔடதங்களினதும் உளமருட்சியூட்டும் பதார்த்தங்கள் பற்றிய 1990 ஆம் ஆண்டு சார்க் சமவாயத்தினை சார்க் நாடுகளுக்கிடையிலான நாடு கடத்தல் ஒப்பந்தமாக பயன்படுத்துவதற்கான அனுமதியினை அமைச்சருக்கு அளிக்கின்றது. | படிமுறையினை குறிக்கின்ற ஒரு சட்டவாக்கமின்றி செயலணிக்கு எவ்வாறு அத்தகைய அதிகாரம் வழங்கப்படலாமென்பதும் தெளிவற்றுள்ளது.<br><br>இலங்கைக்கு வெளியேயுள்ள நபர்கள் மீது அவசியமான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள செயலணி எத்தனிப்பின், அது உள்ளூர் நீதிமன்றங்களால் விசாரிக்கக்கூடிய நியாயதிக்கத்தினைக் கொண்டுள்ள குற்றங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.<br><br>இப்பணியானது ஒரு நபரை இலங்கைக்கு நாடு கடத்தச் செய்வதற்கான நடவடிக்கைகளை செயலணி மேற்கொள்ள முடியும் என்பதனை உட்கிடையாகக் கூறுகின்றது. அத்தகைய செயன்முறையில் சட்டத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள நடபடிமுறைகள் பின்பற்றப்பட வேண்டியதும் மற்றும் அவை அதிகாரத் துஷ்பிரயோகத்தினைத் தடுப்பதற்கான சமநிலைத் தலையீடுகளைக் கொண்டிருக்க வேண்டியதும் அத்தியாவசியமாகும்.<br><br>இப்பணி விபரணத்தில் போதை பொருட்களுடன் தொடர்புடைய குற்றங்கள் என எவ்வித குறிப்பீடும் இல்லை. ஆகவே, பணி விபரணம் 2 இல் விபரிக்கப்பட்டுள்ளதன்படி செயலணியின் அதிகாரம் போதை பொருட்களுடன் தொடர்புடைய குற்றங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதா என்பது தொடர்பில் தெளிவற்ற நிலை காணப்படுகின்றது.<br><br>சமூகத்திற்கெதிரான நடவடிக்கைகள் என்ற சொற் பிரயோகம் தெளிவற்றிருப்பதுடன் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தக்கூடியதுமாகும். |
| 4.சிறைச்சாலைகளில் மற்றும் அதனைச் சூழ இடம்பெறுகின்ற சட்டமுரணான மற்றும் சமூகத்திற்கு எதிரான செயற்பாடுகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் அவற்றைத் தடுத்தல். | குற்றவியல் நடபடிமுறைக் கோவையின் 5 ஆவது அத்தியாயமானது விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய முறையினைக் குறிப்பிடுகின்றது. அதிலுள்ள அதிகாரங்கள் குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு அல்லது கோவையின் 108 ஆம் பிரிவின்படி அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற விசாரணையாளர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன.<br><br>சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு X ஆனது சிறைச்சாலைகளுடன் தொடர்புடைய | ஏதேனும் செயலொன்று ‘சமூகத்திற்கு எதிரானதாக’ (இச்சொற் பிரயோகத்திற்கு வழங்கப்படுகின்ற ஏதேனுமொரு வரைவிலக்கணத்தின் மூலம்), ஆனால் சட்டமுரணற்றதாகக் காணப்படும்போது, அது செயலணியினால் தடுக்கப்பட முடியாதது ஆகும். |

| | | |
|---|---|---|
| | குற்றங்கள் மற்றும் அவை எவ்வாறு மற்றும் யாரால் விசாரிக்கப்படலாம் அல்லது தண்டிக்கப்படலாம் என்பது பற்றியும் குறிப்பிடுகின்றது. | |

## ஆ. கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள் பாரம்பரியச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்கான ஜனாதிபதி செயலணி

### I. பின்னணி

14 மே 2020 அன்று கிழக்கு மாகாண ஆளுனர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு ஆளனியினரின் தலைவர், இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி, பதில் பொலிஸ் மா அதிபர், தேசிய புலனாய்வின் தலைவர், கிழக்கு பாதுகாப்பு படைத் தளபதி ஆகியோரால் தலைமை தாங்கப்பட்ட குழுவொன்று ஏனைய இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகளுடன் தீகவாபிய மற்றும் பொத்துவில் பிரதேசங்களுக்கு விஜயம் செய்தது.[13]

தொல்பொருள் பெறுமதி வாய்ந்த காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றமை தொடர்பாக பொது மக்களால் முன்வைக்கப்பட்ட தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்கள் மற்றும் கரிசனங்கள் தொடர்பில் ஆராயும்பொருட்டு குறிப்பிட்ட அக்குழு இப்பகுதிகளுக்கு விஜயம் செய்திருந்தது. எவ்வாறெனினும், 1940 ஆம் ஆண்டு 9ஆம் இலக்க தொல்பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் மூலம் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்கள் மற்றும் இடங்களுக்கு சாத்தியமான சேதங்கள் ஏற்படக்கூடிய நிலை அல்லது அவற்றை புறக்கணித்துள்ள சூழ்நிலை ஏற்படுகின்றபோது அத்தகைய சந்தர்ப்பங்களை கையாளுவதற்கான அதிகாரம் குறிப்பிட்ட அமைச்சரிற்கே வழங்கப்பட்டுள்ளது.

16 மே 2020 அன்று பாதுகாப்புச் செயலாளர் ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களுக்கு அமைய பொத்துவில் முஹுது மஹா விஹார ஆலயம் மற்றும் அதன் காணியினைப் பாதுகாப்பதற்காக ஒரு கடற்படை குழுவொன்றினை அமைக்கும்படி கடற்படைத் தளபதிக்கு உத்தரவிட்டார்.[14] இதனைத்தொடர்ந்து, பௌத்த ஆலோசனைச் சபையுடனான சந்திப்பின்போது, கிழக்கிலுள்ள தொல்பொருள் பிரதேசங்கள் தொடர்பாக முழுமையான கணக்கெடுப்பொன்றினை முன்னெடுக்க

---

[13] 'Statement on recent developments in Pottuvil Muhudu Maha Viharaya: Misuse of land acquisition laws and the military', People's Alliance for Right to Land, 20th May 2020, https://drive.google.com/file/d/1uXb7fZSvH6nlYQhYC6qxEqHDzAN1-b_f/view

[14] 'Navy instructed to establish contingent to protect the Pottuvil Muhudu Maha Vihara temple', Businessnews.lk, 16th May 2020, https://www.businessnews.lk/2020/05/16/navy-instructed-to-establish-contingent-to-protect-the-pottuvil-muhudu-maha-vihara-temple/

மற்றும் அவற்றைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒரு ஜனாதிபதி செயலணியொன்று நியமிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி கூறினார்.[15]

இதனைத் தொடர்ந்து, ஜூன் மாதம் 2ஆம் திகதியன்று கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள் பாரம்பரியச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்கான ஜனாதிபதி செயலணி ஸ்தாபிக்கப்பட்டது. கிழக்கு மாகாணத்திலுள்ள சிக்கலான மற்றும் எதிர்ப்பிற்குள்ளாகியுள்ள காணி பிரச்சனைகள் தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஏற்கனவே தனது கருத்துக்களைத் தெரிவித்திருந்தது என்பதுடன் அக்கரிசனங்களை இங்கே மீள எடுத்துக் காட்டுவதுடன் அடுத்தக் கட்ட நடவடிக்கைகளை தீர்மானிக்கின்றபோது வெளிப்படையான மற்றும் உள்வாங்குகையுள்ள செயன்முறை பின்பற்றப்பட வேண்டியதற்கான தேவைப்பாட்டினையும் வலியுறுத்துகின்றது.[16] இலங்கையிலுள்ள காணிப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு தேசிய காணி ஆணைக்குழுவின் ஸ்தாபகம் உள்ளடங்கலாக அரசியலமைப்பிற்கான பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதனை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மீள எடுத்துரைக்கின்றது.

## II. செயலணியின் ஆக்கக்கூறு

இச் செயலணியில் இரண்டு பௌத்த மதகுருக்கள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், நான்கு அரசாங்க அலுவலர்கள் (அதாவது, தொல்பொருள் பணிப்பாளர் நாயகம், காணி ஆணையாளர் நாயகம், நில அளவையாளர் நாயகம் மற்றும் கிழக்கு மாகாணத்திற்கான மாகாண காணி ஆணையாளர்), இரண்டு கல்வியியலாளர்கள் (அதாவது, களனி பல்கலைக்கழக பேரா. ராஜ் குமார் சோமதேவ மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட பேரா. கபில குணவர்தன), மேல் மாகாணத்திற்கான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் தனியார் ஊடக வலையமைப்பொன்றின் தலைவர் என்போர் உள்ளடங்குகின்றனர்.

செயலணியின் அதிகாரங்கள் கிழக்கு மாகாணத்திற்கு உட்பட்டதாக உள்ள வேளையில், செயலணிக்கான பொலிஸ் பிரதிநிதித்துவமாக மேல் மாகாணத்திற்கான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ஏன் உள்வாங்கப்பட்டார் என்பது தெளிவற்றுள்ளது. மேலும், தனியார் ஊடக வலையமைப்பொன்றின் தலைவரை நியமிப்பதற்கான காரணங்கள் குறித்தும் போதிய தெளிவு இல்லை.

---

[15] 'Presidential Task Force to protect archaeological sites', PMD News, 22nd May 2020, http://www.pmdnews.lk/presidential-task-force-to-protect-archaeological-sites/

[16] Land in the Eastern Province: Politics, Policy and Conflict, https://www.cpalanka.org/land-in-the-eastern-provincepolitics-policy-and-conflict/

இச்செயலணியில் அரசாங்க அலுவலர்கள் அல்லாதோர் உள்ளடக்கப்பட்டுள்ளமை பல தீவிரமான வினாக்களைத் தோற்றுவிக்கின்றது. இது அரசாங்க அலுவலர்கள் அல்லாதோருக்கு அரசாங்க அலுவலர்களுக்கான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டிகளை வழங்குவதற்கான அதிகாரத்தை அளிக்கின்றது. மேலும், அத்தகைய நபர்கள் இலஞ்ச சட்டத்தின் நோக்கங்களுக்காக அரசாங்க அலுவலர் என்ற வகையறாக்குள் உள்ளடக்கப்படுவார்களா என்ற தெளிவுமில்லை. அத்துடன் சராசரி அரசாங்க அலுவலரை விட குறைந்தளவான கண்காணிப்பிற்கே அவர்கள் உட்படுத்தப்படுவார்களா என்ற தெளிவுமில்லை.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் ஏற்கனவே குறிப்பிடப்பட்டிருப்பதற்கமைய[17], இச் செயலணியானது ஓரினத்தினை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என்பதுடன் இதில் உள்ளடக்கப்பட்டுள்ள மதகுருமாரும் ஒரு மதத்தினையே பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். கிழக்கு மாகாணத்தில் பல்லின மக்கள் வாழ்கின்றமை, அனைத்து சமுதாயங்களிலும் தொல்பொருள் பிரதிநிதித்துவம் இருக்கின்றமை மற்றும் இப்பிரச்சனை தொடர்பில் நிலவுகின்ற சிக்கல் தன்மை போன்ற விடயங்கள் பொருட்படுத்தப்படாது இச்செயலணியின் ஆக்கக்கூறு உருவாக்கப்பட்டுள்ளது. இத்தகைய எதிர்ப்பிற்குரிய மற்றும் கூர் உணர்வுடைய ஒரு பின்னணியில், ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரலினால் தலைமை தாங்கப்படுகின்ற, சிங்களவர்களை மட்டுமே அங்கத்தவர்களாகக் கொண்டுள்ள ஒரு செயலணியை அமைத்து அதற்கு செல்வழியொன்றினை வரையறுப்பதற்கான அதிகாரங்களை வழங்குதலானது அடையாள அரசியல், மக்கள் தொகையியல், காணிக் கட்டுப்பாடு மற்றும் பாவனை மற்றும் நல்லிணக்கம் என்பனவற்றில் குறிப்பிடத்தக்க பல தாக்கங்களை ஏற்படுத்தும்.

### III. செயலணியின் அதிகாரங்கள்

செயலணியானது வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு பணிகளைச் செய்வதற்கு பணிக்கப்பட்டுள்ளது. அவையாவன:

1. *கிழக்கு மாகாணத்திலுள்ள தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அடையாளம் காணுதல்.*
2. *அடையாளம் காணப்பட்ட அத்தகைய இடங்களைப் பாதுகாத்தல் மற்றும் மீட்டெடுத்தலினூடாக தொல்பொருள் பாரம்பரியச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அடையாளம் காணல் மற்றும் அமுல்படுத்தல்.*
3. *அத்தகைய தொல்பொருள் இடங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய காணியின் விஸ்தீரணத்தினை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றை முறையாக மற்றும் சட்டப்படி ஒதுக்குவதற்கு தேவையான பொறிமுறைகளை எடுத்தல்.*
4. *இலங்கையிலுள்ள தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் கலாசாரப் பெறுமதியினைப் பாதுகாத்தல் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் இலங்கையின்*

[17] அடிக்குறிப்பு 5இனைப் பார்க்க

*தனித்துவத்தினை மேம்படுத்தல் மற்றும் அத்தகைய பாரம்பரியச் சொத்துக்களை மேம்படுத்துவதற்கான விதந்துரைகளைச் செய்தல்.*

இக்குறிப்பிட்ட பணிகள் தொடர்பான மேலதிக கரிசனங்கள் மற்றும் அவ்வதிகாரங்களை ஏற்கனவே வேறு அதிகார சபைகள் அல்லது நிறுவனங்களுக்கு பாரப்படுத்தியுள்ள சட்டங்கள் என்பன தொடர்பாக கீழுள்ள அட்டவணையில் ஆராயப்பட்டுள்ளது.

| பணி | மாற்று சட்டங்கள் மற்றும் பொறிமுறைகள் | கருத்துக்கள் |
|---|---|---|
| 1.கிழக்கு மாகாணத்திலுள்ள தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அடையாளம் காணுதல். | 1940ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருள் கட்டளைச் சட்டம்<br><br>இக்கட்டளைச் சட்டத்தின் **பிரிவு 16(1), 17(1)** மற்றும் **18** இன்கீழ், இருப்பிலுள்ள ஏதேனும் தொல்பொருளை அல்லது தொன்மையான சின்னமாக அல்லது பாதுகாக்கப்பட வேண்டிய சின்னமாகக் காணப்படுமென நம்பப்படுகின்ற ஏதேனுமொரு சின்னத்தினை அமைச்சர் பிரகடனப்படுத்தலாம்.<br><br>அத்தகைய ஒரு கட்டளை வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமாக இருப்பின் அது தொடர்பான எதிர்ப்புக்களைத் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பத்தினை வழங்கும்பொருட்டு ஒரு அறிவித்தல் வழங்கப்பட வேண்டுமென **பிரிவு 19** தேவைப்படுத்துகின்றது.<br><br>ஏதேனுமொரு தொன்மைச் சின்னத்திலிருந்து குறிப்பிட்ட தூரத்திற்கு ஏதேனும் கட்டிடங்களைக் கட்டுவதனைத் தடுக்கின்ற அல்லது மட்டுப்படுத்துகின்ற ஒழுங்குவிதிகள் **பிரிவு 24(1)** இன்கீழ் ஆக்கப்படலாம். **பிரிவு 25(1)** இன்கீழ் அத்தகையத் தடையினால் பாதிக்கப்படுகின்ற காணி உரிமையாளர் நட்டஈடு கோரலாம்.<br><br>**26 - 30 வரையான பிரிவுகள்** நட்டஈட்டிற்கான அத்தகையக் கோரிக்கையினைப் பெற்றுக் கொண்டதன்பேரில் அமைச்சர் நட்டஈட்டு சபை ஒன்றை ஸ்தாபித்து, அக்கோரிக்கையினை அச்சபைக்கு ஆற்றுப்படுத்த வேண்டுமென குறிப்பிடுகின்றன. அச்சபை அக்கோரிக்கை தொடர்பில் விசாரித்து அதன் தீர்மானத்தினை வழங்கலாம். குறிப்பிட்ட தீர்மானம் தொடர்பாக கோரிக்கையாளர் அல்லது தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் பிரச்சனைக்குரிய குறிப்பிட்ட காணி அமைந்துள்ள மாவட்டத்தின் மாவட்ட நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய இயலும்.<br><br>**பிரிவு 33(1)**இன்படி, காணி ஆணையாளர் அல்லது குறிப்பிட்ட அமைச்சரின் அனுமதியுடன் தொல்பொருள் பணிப்பாளர் நாயகம் தொல்பொருள் காப்பினை உடைய எந்தவொரு இடத்தையும் பிரகடனம் செய்ய இயலும்.<br><br>**பிரிவு 34**இன்படி, அத்தகையத் தொல்பொருள் காப்பினை அபகரித்துக் கொள்கின்ற எந்தவொரு நபரும் நீதவான் நீதிமன்றத்தின் முன்னரான சுருக்க விளக்கத்தில் தண்டனையளிக்கப்படின் சிறைத்தண்டனை அல்லது தண்டப்பணம் அல்லது இரண்டிற்கும் உட்படுத்தப்பட வேண்டும். | நடைமுறையிலுள்ள சட்டங்கள் இப்பணிகளை செய்கின்ற வேளையில் இப்பணிகள் இச்செயலணிக்கு வழங்கப்பட்டதற்கான காரணங்கள் என்ன என்று கேட்கப்பட வேண்டும்.<br><br>'தொல்பொருள்' என்ற வகைக்குள் உள்ளடக்கப்படுவன பற்றி எவ்வித வரைவிலக்கணமும் வழங்கப்படவில்லை.<br><br>குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகாரத்தை செயலணிக்கு வழங்குகின்ற வர்த்தமானி அறிவித்தலானது அதன் எந்தவொரு தீர்மானத்தினையும் சவாலுக்குட்படுத்துவதற்கான எவ்வித ஏற்பாடுகளையும் கொண்டிருக்கவில்லை.<br><br>நடைமுறையிலுள்ள சட்டத்தினால் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அடையாளம் காணுவதற்கு மற்றும் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள நபர்கள் மற்றும் பொறிமுறைகளின் தீர்மானமானது நீதிமன்றத்தின் அல்லது ஏனைய மருவிய நீதிமன்ற அமைப்புக்களின் மீளாய்விற்கு உட்படக்கூடியது அல்லது பாராளுமன்ற அனுமதியினைத் தேவைப்படுத்துவது. செயலணிக்கும் அத்தகைய பொறுப்புகூறும் தன்மையினை ஏற்படுத்துவது இன்றியமையாததாகும். |

| | | |
|---|---|---|
| | **பிரிவு 39(1)**இன்படி, அமைச்சர் வர்த்தமானியில் கட்டளையொன்றினை பிரசுரிப்பதனூடாக தொல்பொருள் ஆலோசனைக் குழுவொன்றினை (இதன் பின்னர் ஆலோசனைக்குழு எனப்படும்) ஸ்தாபிக்க இயலும்.<br><br>**பிரிவு 40** பின்வரும் அதிகாரங்களை தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்குகின்றது:<br><br>(ஆ) இலங்கையின் தொல்பொருள் பாரம்பரியத்தின் இருப்புநிலையைக் கணக்கெடுப்பதற்கான அதிகாரம்<br><br>(இ) அத்தகைய தொல்பொருள் பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கான மற்றும் பேணுவதற்கான அதிகாரம்<br><br>**பிரிவு 47(1)** ஆனது இக்கட்டளைச் சட்டத்தின் கோட்பாடுகள் மற்றும் ஏற்பாடுகளை நிறைவேற்றும்பொருட்டு அல்லது அவற்றுக்கு வலுவளிக்கும்பொருட்டு அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் என கூறுகின்றது. | |
| 2.அடையாளம் காணப்பட்ட அத்தகைய இடங்களைப் பாதுகாத்தல் மற்றும் மீட்டெடுத்தலினூடாக தொல்பொருள் பாரம்பரியச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அடையாளம் காணல் மற்றும் அமுல்படுத்தல். | 1990 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தொல்பொருள் அமைவிடங்கள் பற்றிய சட்டம்<br><br>**பிரிவு 2(2)**இன்படி, அமைச்சர் வர்த்தமானியில் கட்டளையொன்றினை பிரசுரிப்பதனூடாக இச்சட்டத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்படாத வேறு ஏதேனும் தொல்பொருள் செயற்பாடு, இடங்கள், எச்சங்கள் அல்லது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஏதேனும் தொல்பொருளை பிரகடனப்படுத்தலாம்.<br><br>**பிரிவு 3 ஆனது**, இரண்டாம் உபபிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்படும் திகதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்பதுடன் அத்தகையக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையுடன் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டு வரப்படுதல் வேண்டும் என கூறுகின்றது. பாராளுமன்றத்தினால் அங்கீகாரம் மறுக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் கட்டளை அத்தகைய மறுப்புத் திகதியிலிருந்து, அதன்கீழ் செய்யப்பட்ட எதனதும் செல்லுபடியாகும் தன்மைக்கு பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும். | நடைமுறையிலுள்ள சட்டங்கள் இப்பணிகளை செய்கின்ற வேளையில் இப்பணிகள் இச்செயலணிக்கு வழங்கப்பட்டதற்கான காரணங்கள் என்ன என்று கேட்கப்பட வேண்டும்.<br><br>மேலும், 'தொல்பொருள் பாரம்பரியத்தினை' 'அடையாளப்' படுத்துவதற்கு செயலணியினால் பயன்படுத்தப்படும் வரன்முறைகள் யாவை மற்றும் 'பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுல்படுத்த' மேற்கொள்ளப்படக்கூடிய முன்னெடுப்புக்கள் யாவை |
| 3.அத்தகைய தொல்பொருள் இடங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டிய காணியின் விஸ்தீரணத்தினை அடையாளம் காணுதல் மற்றும் அவற்றை முறையாக மற்றும் சட்டப்படி ஒதுக்குவதற்கு தேவையான பொறிமுறைகளை எடுத்தல். | 1988 ஆம் ஆண்டு 73 ஆம் இலக்க கலாசார சொத்துக்கள் சட்டம்<br><br>**7-10 வரையான பிரிவுகள்** கலாசார சொத்துக்கள் சபையின் ஸ்தாபகம் பற்றி குறிப்பிடுகின்றன. இச்சபையானது தொல்பொருள் ஆணையாளர் தமது அதிகாரங்களை பிரயோகிக்கின்றபோது அவருக்கு ஆலோசனை வழங்குகின்ற ஆலோசனை சபையாக அல்லது சபையின் அபிப்பிராயங்களுக்காக சபைக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்ற ஏதேனும் விடயங்கள் குறித்து ஆலோசனை வழங்குகின்ற சபையாக தொழிற்படும்.<br><br>சபையின் ஆலோசனையுடன் மற்றும் அமைச்சரவையின் அனுமதியுடன் அமைச்சர் வர்த்தமானி அறிவித்தலொன்றினூடாக இச்சட்டத்தின்கீழ் பதிவு | காணி எவ்வாறு அடையாளம் காணப்படும் மற்றும் ஒதுக்கப்படும் என்பது குறித்து எவ்விதத் தகவல்களும் வழங்கப்படவில்லை மற்றும் இது அரச மற்றும் தனியார் காணிகளையும் உள்ளடக்குமா என்பது பற்றியும் குறிப்பீடுகள் இல்லை.<br><br>இது அரசின் மேலதிக நில ஆக்கிரமிப்பிற்கு வழிவகுக்கும். சமநிலைத்தலையீடுகளுடன்கூடிய பொருத்தமான சட்டத்தின்கீழ் (தொல்பொருள் கட்டளைச் |

| | | |
|---|---|---|
| | செய்யப்படவேண்டிய கலாசார சொத்து வகைகளை குறிப்பிடலாம் என **பிரிவு 11** கூறுகின்றது.<br><br>**பிரிவு 22** ஆனது தொல்பொருள் ஆணையாளருக்கு கீழ்வரும் அதிகாரங்களை வழங்குகின்றது:<br>(அ)இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படவேண்டுமென தேவைப்படுத்தப்படுகின்ற கலாசார சொத்து வகைகளின் பட்டியலொன்றினைத் தயாரிப்பதற்கான அதிகாரம்;<br><br>(ஆ) பதிவினைத் தேவைப்படுத்துகின்ற கலாசார சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான, பேணுவதற்கான, பழுது பார்ப்பதற்கான மற்றும் மீட்டெடுப்பதற்கான அதிகாரம் மற்றும் எவரேனுமொரு நபருடைய உடைமையிலிருக்கும் எந்தவொரு கலாசார சொத்தையும் தொல்பொருள் ஆணையாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் சோதனை செய்வதற்கான அதிகாரம்.<br>எவரேனுமொரு ஆளின் சொந்தத்தில், பாதுகாவலில் அல்லது உடைமையிலுள்ள தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஏதேனுமொரு கலாசார சொத்து அழிந்துவிடக்கூடிய ஆபத்தில் உள்ளது என தொல்பொருள் ஆணையாளர் கருதுவாராயின் சபையின் கலந்தாலோசனையுடன் அத்தகைய சொத்தினை பாதுகாக்குமாறு அந்நபருக்கு வழிகாட்டல்களை வழங்கலாம் என **பிரிவு 25(1)** கூறுகிறது.<br><br>அத்தகைய வழிகாட்டல்கள் பின்பற்றப்படாவிட்டால் சபையின் கலந்தாலோசனையுடன் அத்தகைய சொத்தினை அவருடைய பாதுகாவலின் கீழ் எடுக்க முடியும்.<br><br>**பிரிவு 28**- இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ள எவ்விடயம் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்க முடியும்.<br><br>**பிரிவு 29-** ''கலாசார சொத்து'' என்பது தொல்பொருள், வரலாற்றுக்கு முற்பட்ட காலம், வரலாறு, இலக்கியம், கலை அல்லது விஞ்ஞான முக்கியத்துவம் வாய்ந்துள்ள காரணத்தினால் சமய அல்லது சமயஞ்சாராத அடிப்படையில் அமைச்சரவையின் அனுமதியுடன் அமைச்சரினால் குறித்தொதுக்கப்பட்ட சொத்துக்களை உள்ளடக்கும். | சட்டம், காணி கையகப்படுத்தற் சட்டம்) கூறப்பட்டுள்ள நடபடிமுறைக்கு அமைய நில ஆக்கிரமிப்புக்கள் இடம்பெற வேண்டியது இன்றியமையாததாகும். |
| 4.இலங்கையிலுள்ள தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் கலாசாரப் பெறுமதியினைப் பாதுகாத்தல் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் இலங்கையின் தனித்துவத்தினை மேம்படுத்தல் மற்றும் அத்தகைய பாரம்பரியச் சொத்துக்களை மேம்படுத்துவதற்கான விதந்துரைகளைச் செய்தல். | 1980 ஆம் ஆண்டு 57ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச் சட்டம்<br><br>பிரிவு 2 மற்றும் 3 என்பன மத்திய கலாசார நிதியத்தின் ஸ்தாபகம் பற்றி குறிப்பிடுகின்றன. அந்நிதியத்தின் முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் கட்டுப்பாட்டினை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி ஆளுனர்களின் சபைக்கு பாரப்படுத்துகின்றன.<br><br>1979 ஆம் ஆண்டு 7ஆம் இலக்க அரச காணிகள் (உடைமையினை மீட்டெடுத்தல்) சட்டம்<br><br>அதிகாரமளிக்கப்படாத உடைமை அல்லது குடியிருக்கையிலுள்ள நபர்களிடமிருந்து அரச காணிகளின் உடைமையினை மீட்டெடுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றி இச்சட்டம் குறிப்பிடுகின்றது.<br><br>இலங்கையின் தொல்பொருள் திணைக்களம் தொல்பொருள் பாரம்பரியத்தின் முகாமைத்துவம் தொடர்பான தலைமை | *தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் கலாசாரப் பெறுமதியினைப் பாதுகாத்தல்* என்ற பணி எவ்வாறு நிறைவேற்றப்படவுள்ளது என்பது தொடர்பில் எவ்விதத் தகவல்களும் வழங்கப்படவில்லை.<br><br>மேலும், செயலணி யாருக்கு விதந்துரைகளைச் செய்ய வேண்டும் என்பதும் தெளிவற்றுள்ளது. |

| | | |
|---|---|---|
| | நிறுவனமாக மற்றும் தலைமை ஒழுங்கமைப்பு அங்கமாக இயங்கி வருகின்றது. இலங்கையிலுள்ள மொத்த தொல்பொருள் பாரம்பரியத்தினைப் பாதுகாப்பதற்கான பொறுப்பு தொல்பொருள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதாவது, இடங்கள், சின்னங்கள், அசையும் தொல்பொருட்கள் உள்ளடங்கலாக இலங்கையிலுள்ள தொல்பொருட்களின் இருப்புநிலையைக் கணக்கெடுத்தல் மற்றும் பாதுகாப்பதற்கான பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது.<br><br>தொல்பொருள் திணைக்களத்தின் சட்டப் பிரிவானது தொல்பொருட்கள் கட்டளைச் சட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய சட்டங்களைப் பயன்படுத்தி அத்தகையத் தொல்பொருட்களைப் பாதுகாப்பதற்கான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு பொறுப்பாயுள்ளது. அத்துடன், அச்சட்டங்களின் ஏற்பாடுகளை மீறுகின்ற நபர்களை நீதிமன்றங்களினூடாகத் தண்டிப்பதற்கு அவசியமான சட்ட நடவடிக்கையினையும் மேற்கொள்கின்றது. இது தொல்பொருள் திணைக்களத்தின் பணியினை பொலிஸ் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் என்பனவற்றுடன் ஒருங்கிணைத்தலையும் உள்ளடக்கும். | |

## 5. முடிவு

ஜனாதிபதி ராஜபக்ஷ 2019ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின்போது ஒழுக்கமான, பாதுகாப்பான மற்றும் நிலையான இலங்கையை உருவாக்குவதாக வாக்குறுதி அளித்திருந்தார். இவ்வாக்குறுதிகளை நிறைவேற்றும்பொருட்டு அவர் பயணிக்க எத்தனிக்கின்ற பாதை அவருடைய சொந்த அமைச்சரவை அமைச்சர்கள் உள்ளடங்கலாக நடைமுறையிலிருக்கின்ற சட்டக் கட்டமைப்புக்கு அப்பாற்பட்டதாயுள்ளது என்பதனை அண்மைய சம்பவங்கள் வெளிக்காட்டுகின்றன. எதிர்ப்புக்களற்ற அல்லது குறைந்தளவான எதிர்ப்புக்களையே வெளிப்படுத்தியுள்ள இத்தீர்மானம் மற்றும் படைகளுடன் அவர் முன்னோக்கி செல்ல எத்தனித்துள்ளார். இவ் அறிக்கையில் கலந்துரையாடியுள்ளதனைப் போன்று, அவருடைய நோக்கினை அடைந்து கொள்வதற்காக பரந்தளவான அதிகாரங்களைக் கொண்ட குறிப்பிட்ட நோக்கத்திற்கென அமைக்கப்படுகின்ற தற்காலிக செயலணிகளை அவர் செயல்வழியாகத் தெரிந்துள்ளார். இச்செயன்முறையில், சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனங்கள் மழுங்கடிக்கப்படுவதுடன் சாத்தியமான ரீதியில் அவற்றின் அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றன. மேலும், அவருக்கு நெருக்கமான அலுவலர்களை இச்செயலணிகளுக்கு தலைவராக நியமிப்பதனூடாக மற்றும் செயலணிகளை தற்போது பதவியிலுள்ள மற்றும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் மற்றும் பொலிஸ், சட்ட மற்றும் ஒழுங்கு அதிகாரிகளைக் கொண்டு நிரப்புவதனூடாக அவர் விசுவாசத்தினை அங்கீகரித்துள்ளார். அரசாங்கம் மற்றும் ஆட்சியின் இராணுவமயமாக்கம் மற்றும் பாதுகாப்பு என்பன கொவிட்-19 இனை எதிர்கொள்வதற்கான பின்னணியில் அமைக்கப்பட்டுள்ளன என்பதுடன் அவை சட்டவாக்கத்துறையின் இருப்புகையின்றி தற்போது திடமாக்கப்பட்டுள்ளன. இது

அறிமுகப்படுத்தப்பட்ட வேகம் வினைத்திறனுக்கான அரசாங்கத்தின் உறுதிக்கு சான்று பகர்கின்றது. குறிப்பாக, இது பாராளுமன்றம் மற்றும் எவ்வித வினைத்திறனான சமநிலைத்தலையீடுகளும் இல்லாத காலப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. தலையீடுகளில்லாதபோது, அத்தகைய மிகையான நிறைவேற்று அதிகாரம் சுதந்திரமான மற்றும் திறந்த சமுதாயத்தில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதுடன் அதனை சர்வாதிகார மற்றும் இராணுவ அரசினால் ஆளப்படுகின்ற இனரீதியான தேசியமாக நிலைமாற்றிவிடும்.